# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 10.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- சிக்கிம் மாநிலத்தில் உள்ள ‘கஞ்சன்சுங்கா உயிர்கோளக் காப்பகம்’(Khangchendzonga Biosphere Reserve) UNESCO-வின் உலக உயிர்கோளக் காப்பக வலையமைப்பில் (WNBR – World Network of Biosphere Reserve) சேர்க்கப்பட்டுள்ளது.
  - இது இந்தியாவில் இருந்து WNBR ல் சேர்க்கப்படும் 11வது உயிர்கோள காப்பகமாகும்.
  - மேலும் இந்தியாவில் 18 உயிர்க்கோள காப்பகங்கள் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- உலகின் மிகப் பெரிய பறவை சிற்பம் (World’s Largest Bird Sculpture) கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் சத்திய மங்கலத்தில் உள்ள ஜடாயு தேசிய பூங்காவில் அமைய உள்ளது.
  - இந்த சிற்பத்திற்கு ‘ஜடாயு சிற்பம்’ என பெயரிடப்பட்டுள்ளது.

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், ஏலம் எடுப்போருக்கான தகவல் மேலாண்மை அமைப்பை தொடங்கியுள்ளது.
  - இந்த அமைப்பின் மூலம் சாலை போக்குவரத்து திட்டத்திற்காக ஏலம் எடுப்போர்கள், அவர்களுக்கு தேவயைான தகவல்களை முன்னரே அறிந்து கொள்ள முடியும். (BIMS – Bidder Information Management System)

- இந்திய ஏற்றுமதி கூட்டமைப்பு (FIEO – Federation Of Indian Export Organization) உருவாக்கிய நிர்யாத் மத்ரா மொபைல் செயலியை மத்திய வணிகத்துறை அமைச்சர் சுரேஷ் பிரபு

வெளியிட்டுள்ளார்.

- சர்வதேச வாணிபத்தை பற்றி அறிந்து கொள்வதற்காகவும், சர்வதேச வாணிபத்தில் உள்ள ஏற்றுமதி இறக்குமதி கொள்கைகளை அறிந்து கொள்ளவும், நடப்பில் உள்ள ஏற்றுமதி சலுகைகள் பற்றி அறிந்து கொள்ளவும் இந்த செயலி பயன்படும்.

**விளையாட்டு செய்திகள்**

- ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் ‘அபினவ் பிந்த்ரா’ சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) வீரர்கள் குழுவின் உறுப்பினராக (Athletes Commission) நியமிக்கப்பட்டுள்ளார்.

**அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் சைபிரியாவில் விழுந்த விண்கல்லில் (Meteorites) இருந்து Uakitite என்ற புதிய தாதுப் பொருளைக் கண்டறிந்துள்ளனர்.

- Xingkong-2 – ஒலியின் வேகத்தை விட 5 மடங்கு வேகமாக செல்லக்கூடிய (Hypersonic wave Rider) சீனாவின முதல் விமானமான ‘Xing kong-2 வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

**முக்கிய தினங்கள்**

- ஆகஸ்ட் 8 – வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் (Quit India Movement) 76வது ஆண்டு தினம்.
- **குறிப்பு**
  - 1942 ஆகஸ்ட் 8ம் நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி புகழ் வாயந்த வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது.
  - காந்தி, செய் அல்லது செத்துமடி என்று அறைகூவலை விடுத்தார்.

**நியமனங்கள்**

- மாநிலங்களவை துணைத் தலைவராக தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் ஹரிவன்ஷ் நாராயணன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - இதற்கு முன் மாநிலங்களின் துணைத்தலைவராக இருந்த பி.ஜி. குரியன் பதவிகாலம் முடிவடைந்ததை அடுத்து ஹரிவன்ஷ் நாராயணன் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

We Shine Academy ™